தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
19.05.2024

### போலீஸ் தாக்கியதில் இறந்ததாக கூறப்படும் விழுப்புரம் சமையல் மாஸ்டரின்

# உடலை தோண்டி எடுத்து மறுபரிசோதனை செய்ய வேண்டும்

## கலெக்டருக்கு, ஐகோர்ட்டு அதிரடி உத்தரவு

சென்னை, மே.19-

விழுப்புரத்தில் போலீசார் தாக்கியதில் இறந்ததாக கூறப்படும் விழுப்புரம் சமையல் மாஸ்டர் ராஜா என்பவரின் உடலை தோண்டி எடுத்து மறுபிரேத பரிசோதனை செய்யவேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டு அதிரடியாக உத்தரவு பிறப்பித்துள்ளது.

சென்னை ஐகோர்ட்டில், விழுப்புரம் பெரிய காலனியைச் சேர்ந்தவர் அஞ்சு என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:-

### அடி, உதை

என் கணவர் ராஜா, கார்த்திக் என்பவரின் கேண்டீனில் சமையல் மாஸ்டராக வேலைச் செய்தார். ஆனால், சட்டவிரோதமாக மது விற்பனை செய்ததாக கடந்த ஏப்ரல் மாதம் 10-ந்தேதி காலை 9 மணிக்கு விழுப்புரம் தாலுகா போலீசார் பிடித்துச் சென்றனர். போலீஸ் நிலையத்தில் லத்தியாலும், பூட்ஸ் காலாலும் அடித்து உதைத்ததால், என் கணவர் ராஜா படுகாயம் அடைந்தார். உடனே போலீஸ் நிலைய ஜாமீனில் அவரை விடுவித்தனர். அவருக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டது. வீட்டுக்கு வந்ததும் உடல்நிலை மோசம் அடைந்ததால், விழுப்புரம் அரசு ஆஸ்பத்திரிக்கு அன்று இரவு அழைத்துச் சென்றோம். ஆனால், அவர் சிகிச்சைக்கு பலனின்றி இறந்துவிட்டார்.



ராஜா

### போலீஸ் மிரட்டல்

இதையடுத்து, அவசர அவசரமாக எனது கணவரின் உடலை பிரேத பரிசோதனை செய்ததுடன், அதை தகனம் செய்யும்படி போலீசார் நிர்ப்பந்தம் செய்தனர். எங்கள் குடும்ப வழக்கப்படி உடலை அடக்கம் செய்த நிலையில், உடலை தோண்டி எடுத்து எரிக்க வேண்டும் என்று போலீசார் மிரட்டி வருகின்றனர்.

எனவே, போலீஸ் சித்ரவதையில் இறந்துபோன எனது கணவரின் உடலை தோண்டி எடுத்து மீண்டும் பிரேத பரிசோதனை செய்ய உத்தரவிட வேண்டும். போலீஸ் நிலையத்தில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை சேகரித்து பாதுகாக்கவும், இதுசம்பந்தமாக விசாரணை நடத்தவும் உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியிருந்தார்.

### தோண்டி எடுக்கவேண்டும்

இந்த வழக்கு நீதிபதி ஆர். சக்திவேல் முன்பு விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வக்கீல் ஹென்றி திபேன் ஆஜராகி வாதிட்டார். இதையடுத்து நீதிபதி பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:-

ராஜா மரணம் குறித்து 17 பேரிடம் விசாரணை நடத்தி வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாக கூறும் போலீசார், அதை சம்பந்தப்பட்ட மாஜிஸ்திரேட்டு கோர்ட்டுக்கு அனுப்பி வைக்கவில்லை. போலீஸ் நிலையத்தில் ராஜாவுக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டபோது, அவருக்கு முறையான சிகிச்சையும் வழங்கவில்லை.

எனவே, புதைக்கப்பட்ட மனுதாரரின் கணவர் உடலை தோண்டி எடுப்பதற்கான தகுந்த நடவடிக்கையை மாவட்ட கலெக்டர் எடுக்க வேண்டும்.

### 2 டாக்டர்கள்

இந்த உடலை மீண்டும் பிரேத பரிசோதனை செய்வதற்காக சென்னையில் இருந்தும், திருச்சியில் இருந்தும் தலா ஒரு டாக்டர்களை மருத்துவ கல்வி இயக்குனர், விழுப்புரம் அரசு ஆஸ்பத்திரி டீன் ஆகியோர் நியமிக்க வேண்டும். ஒருவேளை டாக்டர்கள் இல்லை என்றால், மதுரை, நெல்லை அரசு ஆஸ்பத்திரி கல்லூரிகளில் பணியாற்றும் 2 டாக்டர்களை நியமிக்கவேண்டும். சந்தோஷ் என்பவர் தொடர்ந்த வழக்கில் இந்த ஐகோர்ட்டு பிறப்பித்த நிபந்தனைகளை பின்பற்றி மனுதாரரின் கணவர் உடலை பிரேத பரிசோதனை செய்யவேண்டும்.

### கேமரா பதிவு

விழுப்புரம் தாலுகா போலீஸ் நிலையத்தில், ஏப்ரல் 9-ந்தேதி காலை 6 மணி முதல் 11-ந்தேதி மாலை 6 மணி வரையிலான கண்காணிப்பு கேமரா பதிவுகளை கைப்பற்றும்படி உள்துறை செயலாளர், டி.ஜி.பி., ஐ.ஜி. மற்றும் விழுப்புரம் போலீஸ் சூப்பிரண்டு ஆகியோருக்கு உத்தரவிடுகிறேன்.

இவ்வாறு நீதிபதி உத்தரவில் கூறியுள்ளார்.